# HSBC அட்வான்ஸ்

முக்கிய விதிகளின் சுருக்கம்*

## துரித தகவல்கள்

| வசதியின் சிறப்பம்சங்கள் | | மேலதிக தகவல்களுக்கு |
|---|---|---|
| தகுதி நிபந்தனைகள் | • ரூ. 1,000,000 அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான பெறுமதிக்கு மேற்பட்ட தொகை கால வைப்பாகப் பேணப்பட வேண்டும்.<br>• சேமிப்பு அல்லது நடைமுறைக் கணக்கொன்றில் ரூ. 250,000 அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான பெறுமதிக்கு மேற்பட்ட தொகை பேணப்பட வேண்டும்.<br>• ரூ. 1,000,000 க்கு மேற்பட்ட தொகை கடனாக (தனிப்பட்ட கடன்) பெறப்பட்டிருக்க வேண்டும்.<br>• ரூ. 250,000 க்கு குறையாத மாதாந்தச் சம்பளம் HSBC இலுள்ள அட்வான்ஸ் கணக்கிற்கு அனுப்பப்பட வேண்டும். | • HSBC அட்வான்ஸ் வரவேற்புக் கைந்நூல்<br><br>• HSBC அட்வான்ஸ் விதிகள் மற்றும் நிபந்தனைகள் |
| ஒரே பார்வையில் HSBC அட்வான்ஸ் நன்மைகள் | • இலவச HSBC அட்வான்ஸ் வீசா பிளட்டினம் கிறெடிட் கார்ட்<br>• இலவச HSBC அட்வான்ஸ் வீசா பிளட்டினம் டெபிற் கார்ட்* மற்றும் நாடெங்கும் எந்தவொரு Plus ATM ஊடாகவும் பண மீளப்பெறுகைகள்<br>• மேலதிகப் பற்று வசதி*<br>• HSBC நடைமுறைக் கணக்கு மற்றும் சேமிப்புக் கணக்கு<br>• நிலையான வைப்புக்களுக்கு முன்னுரிமை வட்டி வீதங்கள்*<br>• வங்கி வசதிகள் மற்றும் சேவைகளுக்கு முன்னுரிமை கட்டணங்கள்<br>• பிரத்தியேகமான 24x7 மணிநேர துரித அழைப்பு நிலையம்<br>• சகல கிளைகளிலும் பிரத்தியேகமான சேவைக் கருமபீடங்கள்<br>• இலவச இணையத்தள மற்றும் தொலைபேசி வங்கிச் சேவைகள்<br>• வருடம் முழுவதும் கிறெடிட் கார்ட் சலுகைகள்<br>• சர்வதேச அங்கீகாரமும் சேவையும்<br>• சர்வதேச கணக்கை ஆரம்பிப்பதற்கு உதவி<br>• அவசர தேவைக்கு உலகெங்கும் எந்தவொரு HSBC கிளையிலும் பணம்**<br><br>*விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு www.hsbc/lk/advance ஐ பார்க்கவும்.<br>* * நாணயப் பரிவர்த்தனைக் கட்டுக்கபாட்டு / ஒழுங்குபடுத்தல் தேவைகளுக்கு உட்படும். | |

| நிதி அம்சங்கள் | | |
|---|---|---|
| கீழ் மீதிக் கட்டணம் | • தெரிவு செய்யப்பட்ட தகுதி நிபந்தனை பேணப்படாவிட்டால், **மாதாந்த கீழ் மீதிக் கட்டணமாக இ.ரூ 1,250** அறவிடப்படும். | • வங்கியின் விதிப்பனவுகள் வழிகாட்டி<br><br>• HSBC அட்வான்ஸ் விதிகள் மற்றும் நிபந்தனைகள்<br><br>• HSBC அட்வான்ஸ் பொது இணையத்தளம் |
| கிறெடிட் கார்ட் கட்டணம் | • பிரதான மற்றும் மேலதிக அட்வான்ஸ் பிளட்டினம் கிறெடிட் கார்ட்டிற்கு வருடாந்தக் கட்டணமும் சேர்வுக் கட்டணமும் கிடையாது. | |
| ATM பண மீளப்பெறுகைக் கட்டணம் | • HSBC உள்நாட்டு/வெளிநாட்டு கிளைகளின் ATMகளிலும் (Plus) ஏனைய உள்நாட்டு வங்கிகளின் ATMகளிலும் சகல பண மீளப்பெறுகைகளும் இலவசம். | |
| ஏனைய கட்டணங்கள் | • தெரிவு செய்யப்பட்ட சில வங்கிச் சேவைகளுக்குக் கட்டணத் தள்ளுபடி அல்லது சலுகைகக் கட்டணம். குட்டணங்கள் மற்றும் விதிப்பனவுகளின் விபரங்களுக்கு HSBC இணையத்தளத்தில் அல்லது கிளைகளில் கிடைக்கும் “HSBC வாடிக்கையாளர்களுக்கான வங்கிச் சேவை விதிப்பனவுகள் வழிகாட்டி” அட்டவணையைப் பார்க்கவும். | |

## துரித தகவல்கள்

| முக்கிய விதிகள் | | மேலதிக தகவல்களுக்கு |
|---|---|---|
| **HSBC அட்வான்ஸ் வசதிக்கான தகுதி** | • HSBC அட்வான்ஸ் சிறப்பம்சங்களையும் நன்மைகளையும் அனுபவிக்க வேண்டுமாயின், நீங்கள் தகுதி நிபந்தனைகளையும் பொருத்தமான ஏனைய விதிகள் மற்றும் நிபந்தனைகளையும் பூர்த்திசெய்ய வேண்டும். | • ஒருங்கிணைக்கப்பட்ட கணக்கு விதிகள் மற்றும் நிபந்தனைகள் |
| **தகுதி நிபந்தனைகளின் மாற்றம்** | • வங்கியானது தகுதி நிபந்தனைகளைக் காலத்திற்குக் காலம் மாற்ற உரிமை கொண்டுள்ளது. அத்தகைய திருத்தங்கள் HSBCயின் பொது இணையத்தளத்திலும் கிளைகளிலுள்ள பொது இடங்களிலும் பார்வைக்கு வைக்கப்படும். | |
| **கூட்டுக் கணக்குகள்** | • நீங்கள் உங்களது கூட்டுக் கணக்கு வைப்பாளருடன் சேர்ந்து, சம்பந்தப்பட்ட கணக்கு, சேவை அல்லது விதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழான சகல கடப்பாடுகளுக்கும் பொறுப்புக்களுக்கும் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்பேற்க வேண்டும். | |
| **அறவீடுகள்** | • பொருத்தமானவிடங்களில் காலத்திற்குக் காலம் சேவைக் கட்டணங்கள், வசதிக் கட்டணங்கள் அல்லது ஏனைய அறவீடுகள் விதிக்கப்படும். HSBC இணையத்தளத்தில் அல்லது கிளைகளில் கிடைக்கும் “வாடிக்கையாளர்களுக்கான வங்கி விதிப்பனவு வழிகாட்டி”யில் இக் கட்டணங்களும் அறவீடுகளும் பிரசுரிக்கப்பட்டிருக்கும். | |
| **கால வைப்புக்கள் மற்றும் சேமிப்புக் கணக்குகளுக்கான வட்டி வீதங்கள்** | • சேமிப்பு மற்றும் கால வைப்புக் கணக்குகளுக்கான (வெளிநாட்டு நாணயம்/உள்நாட்டு நாணயம்) வட்டி வீதங்கள் காலத்திற்குக் காலம் முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம். எனினும், ஏற்கனவே செய்யப்பட்ட கால வைப்புக்களுக்கு, அவை முதிர்ச்சி அடையும் வரை, ஒப்புக்கொள்ளப்பட்ட வட்டி வீதம் மாற்றப்பட மாட்டாது. | |
| **கடன்கள் மற்றும் சொத்து வசதிகளுக்கான வட்டி வீதங்கள்** | • வைப்பு/கடன் திட்டங்களுக்கான வட்டி வீதங்கள் காலத்திற்குக் காலம் சந்தை வட்டி வீதங்களுக்கேற்ப வங்கியினால் தீர்மானிக்கப்படும் விதத்தில் மாற்றப்படலாம். வட்டி வீதங்களில் செய்யப்படும் மாற்றங்கள் எமது கட்டடங்களில் மற்றும் /அல்லது HSBCயின் பொது இணையத்தளத்தில் பார்வைக்கு வைக்கப்படும் அறிவித்தல்கள், மற்றும் /அல்லது கடிதம் மற்றும் /அல்லது விபரக்கூற்றுச் செய்தி மற்றும் /அல்லது பொருத்தமான வேறேதும் வழியில் உங்களுக்கு அறிவிக்கப்படும். | |
| **உங்கள் தகவல்களைப் பயன்படுத்துதல்** | • நாம் உங்களுக்கு ஏதேனும் சேவையை வழங்க முடியுமா என்பதை ஆராய்ந்து தீர்மானிப்பதற்கு வசதியாக, காலத்திற்குக் காலம் உங்களின் தனிப்பட்ட விபரங்களை நீங்கள் எமக்குத் தெரிவிக்க வேண்டும். ஏதேனும் தனிப்பட்ட விபரத்தை மீளப் பார்வையிடுவதற்கு வேண்டுகோள் விடுக்க அல்லது நேரடிச் சந்தைப்படுத்தல் நோக்கத்திற்கு உங்கள் தனிப்பட்ட விபரங்களைப் பயன்படுத்த வேண்டாமென வேண்டுகோள் விடுக்க உங்களுக்கு உரிமையுண்டு. | |
| **உங்கள் கணக்குகளில் பற்று வைக்க, எதிரீடு செய்ய எமக்குள்ள உரிமை** | உங்களுக்கு முன்னறிவித்தல் கொடுக்காமல் பின்வருவனவற்றைச் செய்ய எமக்கு உரிமையுண்டு:<br>• நீங்கள் எமக்குச் செலுத்த வேண்டிய ஏதேனும் தொகையை நீங்கள் எமது வங்கியில் வைத்திருக்கும் எந்தவொரு கணக்கிலாயினும் பற்று வைப்பதற்கு.<br>• நீங்கள் எமது வங்கியில் வைத்திருக்கும் ஏதேனும் அல்லது சகல கணக்குகளிலும் மீதியாகவிருக்கும் தொகைகளை இடைநிறுத்திவைக்க, ஒருங்கிணைக்க அல்லது ஒன்று திரட்டவும், அத்தகைய கணக்குகளில் வரவாகவுள்ள ஏதேனும் பணத்தை, உங்களால் எமக்குச் செலுத்தப்பட வேண்டியுள்ள ஏதேனும் உண்மையான அல்லது எதேச்சையான, தற்போதய அல்லது எதிர்கால பொறுப்புக்களை (அது தனியாக உங்களால் அல்லது இன்னுமொருவருடன் சேர்ந்து கூட்டாகச் செலுத்தப்பட வேண்டியதாக இருக்கலாம்) தீர்ப்பனவு செய்வதற்கான எதிரீடு செய்வதற்கு அல்லது மாற்றீடு செய்வதற்கு.<br>• எமது வங்கியில் நீங்கள் வைத்துள்ள ஏதேனும் அல்லது சகல கணக்குகளிலும் ஏதேனும் நாணயத்தில் மீதியாகவுள்ள தொகை, நீங்கள் எமக்குச் செலுத்த வேண்டிய தொகைக்குக் குறைவாக இருக்குமாயின், அக் | |

## துரித தகவல்கள்

| முக்கிய விதிகள் | | மேலதிக தகவல்களுக்கு |
|---|---|---|
| சேவைகளின் அல்லது கணக்குகளின் முடிவுறுத்தல் | • நீங்கள் எழுத்துமூல முன்னறிவித்தல் கொடுத்துவிட்டு எமது சேவைகளை அல்லது உங்களின் கணக்குகளை முடிவுறுத்தல் செய்யலாம்.<br>• நாம் முன்னறிவித்தல் கொடுக்காமலே எமது சேவைகள் முழுவதையும் அல்லது அவற்றில் ஏதேனுமொரு பகுதியை முடிவுறுத்தல் செய்யவும் முன்னறிவித்தல் கொடுத்துவிட்டு உங்கள் கணக்குகளை முடிவுறுத்தல் செய்யவும் முடியும். | •ஒருங்கிணைத்த கணக்கு விதிகள் மற்றும் நிபந்தனைகள் ("T&Cs") |
| விதிகள் மற்றும் நிபந்தனைகளின் மாற்றம் | • காலத்திற்குக் காலம் விதிகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றும் உரிமை எமக்கு உண்டு. இந்த மாற்றங்கள் எமது கட்டடங்களில் பார்வைக்கு வைக்கப்படும் அறிவித்தல்கள், HSBCயின் பொது இணையத்தளம் அல்லது பொருத்தமான வேறேதும் வழியில் உங்களுக்கு அறிவிக்கப்படும். | |

## உங்கள் குரல்

உங்கள் அபிப்பிராயங்களை எமக்குத் தெரிவிக்க விரும்பினால், தயவுசெய்து தொடர்புகொள்ளவும்.

தபால் முகவரி – முகாமையாளர், வாடிக்கையாளர் சேவைகள், நுகர்வு விநியோக மற்றும் செல்வ முகாமைப் பிரிவு, HSBC நிலையம், இல.525, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
வாடிக்கையாளர் சேவை துரித தொலைபேசி - +94 114 511 566
மின்னஞ்சல்: customersolutions@hsbc.com.lk
இணையத்தளம்: www.hsbc.lk

நீங்கள் முன்வைக்கும் பிரச்சினைகளை உங்களுக்குத் திருப்தியளிக்கும் விதத்தில் தீர்த்துவைக்கவே நாம் எப்போதும் விரும்புகிறோம். எனினும், நீங்கள் விரும்பினால் நிதித்துறை ஆலாட்சி அதிகாரியின் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு உங்கள் பிரச்சினைக்கு நிவாரணம் கோரலாம். ஆலாட்சி அதிகாரியின் தொடர்பு விபரங்கள் பின்வருமாறு:

தபால் முகவரி: நிதித்துறை ஆலாட்சி அதிகாரியின் அலுவலகம், இல.143, வஜிரா வீதி, கொழும்பு 05.
தொலைபேசி: + 94 112 595 625
தொலைநகல்: + 94 112 595 624
மின்னஞ்சல்: info@financialombudsman.lk
இணையத்தளம்: www.financialombudsman.lk

- ஒருங்கிணைக்கப்பட்ட கணக்கிற்கு ஒருங்கிணைக்கப்பட்ட கணக்குகளுக்கான பூரண விதிகள் மற்றும் நிபந்தனைகளே செல்லுபடியாகும். இந்த அட்டவணையில் காணப்படுவது தகவலுக்காகத் தரப்பட்டுள்ள முக்கிய விதிகளின் சுருக்கம் மாத்திரமே. இதனை பூரண விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குப் பதிலானதாகக் கொள்ள முடியாது. ஏதேனும் முரண்பாடுகள் காணப்படும் பட்சத்தில் பூரண விதிகள் மற்றும் நிபந்தனைகளே மேலாதிக்கம் செலுத்தும்.

- இந்த முக்கிய விதிகளின் சுருக்கத்தின் ஆங்கில மற்றும் சிங்களப் பிரதிகள் www.hsbc.lk என்ற இணையத்தளத்தில் கிடைக்கும். அவற்றின் அச்சுப்பிரதிகளை வங்கியின் சகல அலுவலகங்கள் மற்றும்/அல்லது கிளை அலுவலகங்களில் பெறலாம். சிங்கள மற்றும் தமிழ் மொழிபெயர்ப்புக்களில் ஏதேனும் முரண்பாடு காணப்படுமாயின், ஆங்கில மூலப்பிரதியே சரியானதாக மேலாதிக்கம் செலுத்தும் என்பதை நான்/நாம் இத்தால் ஏற்றுக்கொள்கிறேன்/ஏற்றுக்கொள்கிறோம்.